பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 11 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முடக்குவது ஏற்புடையது அல்ல என்று மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. அரசியலமைப்புச் சட்டத்தின்மீது எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. விவசாயிகளுக்கான கடன் அட்டை திட்டம் மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை பயனாளிகளுக்கும் பலன் அளித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்துள்ளதாகவும், நாளை பிற்பகல் புதுச்சேரி அருகே கரையை கடக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார்.

*<u>-- இனி விரிவான செய்திகள் ----</u>*

<<<<<<>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முடக்குவது ஏற்புடையது அல்ல என்று மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்ட நிலையில், குறுக்கிட்டு பேசிய திரு ஜெக்தீப் தங்கர், இந்த வாரம் முழுவதும் எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளை எழுப்பியதன் காரணமாக மக்களுக்காக பயன்பட வேண்டிய அலுவல் நாட்களை இழந்திருப்பதாக கூறினார்.

இதன்மூலம், உறுப்பினர்கள் அனைவரும் நாட்டு மக்களை அவமதிப்பதாக அவர் குறை கூறினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் மக்களை மையமாக கொண்டு நடைபெறவில்லை என்று திரு ஜெக்தீப் தங்கர் வருத்தம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாடு முன்னேற்றப்பாதையில் செல்வதை தடுக்கும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக ஒடிஷா தலைநகர் புவனேஷ்வர் சென்ற பிரதமர், பிஜேபி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்மீது எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லை என்று குற்றம் சாட்டிய அவர், அரசின் மீதும், அரசின் கொள்கைகள் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை காரணமாகவே ஹரியானா, மகாராஷ்ட்ரா மாநிலங்களில் பிஜேபி வெற்றிபெற்றதாக குறிப்பிட்டார்.

ஒடிஷா மாநிலத்தில் பிஜேபி ஆட்சி அமைந்ததும் மகளிருக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு மகளிர் அதிகாரம் பெற்றிருப்பதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, விமான நிலையத்தில் இருந்து பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு திறந்த வாகனத்தில் பேரணியாக சென்ற பிரதமருக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

<<<<<<>>>>>

விவசாயிகளுக்கான கடன் அட்டை திட்டம் மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை பயனாளிகளுக்கும் பலன் அளித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார

பீகார் மாநிலம் தர்பங்காவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த கடன் அட்டை திட்டம் மீனவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையினருக்கும் விரிவுபடுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மகளிர் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக தெரிவித்த அவர், மகளிரை மையப்படுத்தும் பட்ஜெட்டிற்கு பதிலாக, மகளிர் தலைமை தாங்கும் வகையில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கக்கூடிய பட்ஜெட்டை அரசு தாக்கல் செய்துள்ளது என்றார்.

இதன்மூலம், எதிர்காலத்தில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவாவதற்கு வழிவகை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மகளிர் சுயஉதவிக்குழுவை சேர்ந்தவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிகழ்ச்சியில், பல்வேறு திட்டங்களின்கீழ், 49 ஆயிரம் பயனாளிகளுக்கு ஆயிரத்து 388 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்களையும் திருமதி நிர்மலா சீதாராமன் வழங்கினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் 5 ஆயிரத்து 600 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளதாக சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உச்சநீதிமன்றத்தில் இரண்டு பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளதாக கூறினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் உயர்நீதிமன்றங்களில் 500 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜவுளித்துறையில் மகளிருக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் வகையில், ஆறு லட்சம் பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு **Pabitra Margherita** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜவுளித்துறையில் மகளிரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக கூறினார்.

அரசின் **Samarth** திட்டத்தின்கீழ், பயிற்சி பெற்ற பயனாளிகளில் 88 சதவீதம் பேர் மகளிர் என்றும், அவர்களுக்கு அதிகாரம் வழங்க அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டில் அறிவியல் இதழியல் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புத்தாக்க கண்டுபிடிப்புகளை சமூகத்துக்கு பலன் தருபவையாக மாற்றுவதற்கு பயனுள்ள அறிவியல் தொடர்பு மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

அறிவியல் தொடர்பான சிறப்பு செய்திகளை சேகரிப்பதன் மூலம், அறிவியல் இதழியல் கலாச்சாரத்தை மேம்படுத்த முடியும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மத்திய அரசின் மலிவு விலை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அடுத்த மூன்றாண்டுகளுக்குள் 25 ஆயிரம் மருந்தகங்களை திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தற்போது புதிய மருந்தகங்களை திறப்பதற்காக தொள்ளாயிரத்து 90 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர், **Fenjal** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புயல், நாளை பிற்பகல் மகாபலிபுரத்திற்கும் – காரைக்காலுக்கும் இடையே கரையை கடக்கக்கூடும் என்று கூறினார்.

*(சவுண்ட் பைட் – செந்தாமரை கண்ணன் 55 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினரை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் குறித்து பங்களாதேஷ் அரசிடம் உறுதியான எதிர்ப்பை இந்தியா தெரிவித்திருப்பதாக கூறினார்.

இந்துக்களுக்கு எதிராக தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவது கவலையளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

சமூக சேவையில் பிரபலமாக விளங்கும் இஸ்கான் அமைப்புக்கு எதிராக பங்களாதேஷ் அரசு நடவடிக்கை எடுத்துவருவதும், அந்த அமைப்பை சேர்ந்த **Chinmoy Krishna Das** கைது செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ள திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

இதற்கிடையே, இஸ்கான் அமைப்புடன் தொடர்புடைய 17 பேரின் வங்கிக்கணக்குகளை பங்களாதேஷ் நிதி உளவுப்பிரிவு முடக்கியுள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் **Gondia** மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பிருந்தாவன் டோலா கிராமத்தில் **Sadak Arjuni** என்ற இடத்தில் அரசு பேருந்து கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, தலா பத்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று கூறியுள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் ஷாமிலி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார். இப்போட்டியின் இறுதிச்சுற்று முடிவில் ஏழரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

-----------

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-17 என்ற செட் கணக்கில் சீனாவின் **Dai Wang** –ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Unnati Hooda** 21-16, 21-9 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Ishika Jaiswal** –ஐ வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Treesa Jolly – Gayatri Gopichand** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Dhruv Kapila – Tanisha Crasto** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<<<END>>>>>**